# கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்

# வெற்றிடங்கள்

உதவி நூலகர் பதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் 2025-06-18ஆம் திகதி வரை கட்புல மற்றும் அரங்கேற்றக்கலை பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பதவி: உதவி நூலகர்**

**விசேடக் குறிப்பு:**
நூலக தன்னியக்கம், நூலக முகாமைத்துவ முறைமை மற்றும் Linux Operating System என்பவற்றில் அனுபவம் மற்றும் அறிவைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சம்பள அளவு:**
உதவி நூலகர் U-AC 3(IV) ரூபா 94,000 - 10x2,400 - 118,400 மாதாந்தம்.

❖ இதற்குப் புறம்பாக பதவிக்கு ஏற்புடையதான ஏனைய கொடுப்பனவுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பிரகாரம் வழங்கப்படும்.

**விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**

(1) அபேட்சகர்களுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை www.vpa.ac.lk எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(2) பல்கலைக்கழக சேவைகள் / அரசாங்கத் திணைக்களங்கள் / அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிகள் சபைகளில் இருக்கும் அபேட்சகர்கள் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.

(3) இயைபுடைய சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் சான்றுபடுத்திய பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை 2025-06-18ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

**பிரதிப் பதிவாளர்,**
**கல்வி நிறுவனங்கள் பிரிவு,**
**கட்புல மற்றும் அரங்கேற்றக் கலை பல்கலைக்கழகம்,**
**21, அல்பர்ட் கிரசன்ட், கொழும்பு -07.**

(4) பல்கலைக்கழகப் பேரவையின் ஒப்புதல் நடைமுறை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 921ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் வகுதி அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

(5) இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது. குறும் பட்டியலிடப்பட்ட அபேட்சகர்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்காத விண்ணப்பங்கள், தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் மற்றும் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(6) இந்தப் பதவிக்கான எந்த வகையான பரப்புரையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அது ஒரு தகுதியீனமாகக் கருதப்படும்.

**பதிவாளர்,**
**கட்புல, அரங்கேற்றக்கலை பல்கலைக்கழகம்**

2025-05-14.